மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 158, திரு. கே.ஏ. மனோகரன் இருக்கையில் இல்லை.

வினா எண் 159 திரு. ஆர்.டி. அரங்கநாதன்; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

159—

மங்கலம்பேட்டை பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைத்தல்

*9496— திரு. ஆர்.டி. அரங்கநாதன் :
மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, மங்கலம்பேட்டை பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில்; விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. ஆர். டி. அரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லி விட்டார்கள். மங்கலம்பேட்டை பேரூராட்சியானது விருத்தாசலத்திற்கும் உளுந்தூர்பேட்டைக்கும் இடையிலே இருக்கின்ற ஒரு மையமான பகுதியாகும். இந்தப் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியிலே இருந்து, அதன் அருகாமையில் இருக்கின்ற சுமார் 20-க்கும் மேற்பட்ட கிராமங்களிலிருந்து அந்தப் பேரூராட்சிக்கு வந்து, அங்கிருந்து பேருந்திலே அருகாமையில் இருக்கின்ற பல்வேறு பகுதிகளுக்குச் செல்ல வேண்டி இருக்கின்ற காரணத்தினாலும், அந்தப் பேரூராட்சியை மையமாகக் கொண்டு செல்கின்ற பேருந்துகள் எல்லாம் கடைவீதியில்

1994 மார்ச் 30]

இருக்கின்ற சாலை வழியாகச் செல்கின்ற நேரத்திலே ஒரு பஸ் மட்டும் செல்லக்கூடிய ஒரு பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலும், பல்வேறு வாகனங்களை அங்கே நிறுத்தி மக்களை ஏற்றிச் செல்கின்ற நேரத்திலே போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுகின்ற காரணத்தினாலும் அந்தப் பகுதியில் ஒரு பேருந்து நிலையம் அமைத்துத் தந்தால் அந்தப் பகுதியில் பல்வேறு கிராமங்களிலிருந்து வருகை தருகின்ற மக்கள் எல்லாம் கூடுகின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், பொதுமக்களுக்கு நன்மையாக அமையும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லதோர் ஆட்சியிலே இந்த சிறப்பான ஒரு திட்டத்தை அங்கே நிறைவேற்ற பேருந்து நிலையத்தை அமைத்துத் தந்தால் பொது மக்களுக்கு நன்மையாக அமையும். எனவே, இதை அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்,

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மங்கலம்பேட்டை பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைப்பதற்குப் போதிய இடவசதி பேரூராட்சியில் இல்லை. மேலும் இந்தப் பேரூராட்சியிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள உளுந்தூர்பேட்டையிலும், 10 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள விருத்தாசலம் நகராட்சியிலும் பேருந்து நிலையம் செயல்படுவதால் போக்குவரத்து ரீதியில் இடைப்பட்ட இந்தப் பேரூராட்சியில் பேருந்து நிலையம் ஏற்படுவது பயன் அளிக்காது.

திரு. ஆர்.டி. அரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பேரூராட்சியில் பல்வேறு கிராமங்களிலிருந்தும் வருகிற மக்கள் அதிகமாகக் கூடுகிற காரணத்தால் பேருந்து நிலையம் அவசிய தேவையாகும். அந்தப் பேரூராட்சிக்குச் சொந்தமான இடம் அருகில் இருந்து கொண்டிருக்கிறது. இப்போது கூட அங்கே அந்தப் பேரூராட்சியில் அரசு எடுக்கிற நடவடிக்கை காரணமாக பல்வேறு நலத்திட்டங்களை செய்வதற்காக இடங்களை அங்கே வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் அந்தப் பேரூராட்சிக்கு ஒரு பேருந்து நிலையம் அமைத்துத் தந்தால் சிறப்பாக அமையும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை மறுபரிசீலனை செய்து அங்கே பேருந்து நிலையம் அமைத்துத் தர முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மங்கலம்பேட்டை பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைப்பதற்கு போதிய இட வசதி

பேரூராட்சியில் இல்லையென்று தெரிவித்து இருந்தேன். தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடவசதி அந்தப் பேரூராட்சியில் இருக்கிறது என்று சொல்கிறார். அப்படிப்பட்ட சாத்தியக் கூறுகள் இருக்குமானால் அது பரிசீலனை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 160, திருமதி ஜெ. லோகாம்பாள், இருக்கையில் இல்லை.

வினா எண் 145, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் எடுத்துக் கொள்ளப் படுகிறது. திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

145—

தாரமங்கலம் தொகுதியில் விசைத்தறி தொழிற்பேட்டை அமைத்தல்.

*19782— திரு. க. அர்ச்சுனன் :

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதியில் தொளசம்பட்டியிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் விசைத்தறியும், கைத்தறியும் பெருகி வருவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆதலால், அப்பகுதியில் ஒரு விசைத்தறி தொழிற்பேட்டை அமைக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தாரமங்கலம் தொகுதியில் தொளசம்பட்டியிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் விசைத்தறியும் கைத்தறியும் பெருகி வருவதை அரசு அறியும். ஆனால் அப்பகுதியில் விசைத்தறி தொழிற்பேட்டை அமைக்க இயலாது.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைத்தறிகள் அதிகமாகப் பெருகி வருகிற காரணத்தால் அங்கே ஒரு விசைத்தறிக் கூடம் அமைத்தால் அந்தப் பகுதியில் இருப்பவர்களுக்கு அதிகமான வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற காரணத்தால், அந்தப் பகுதியில் விசைத்தறிக் கூடம் அமைப்பதற்கான அடி நிலம், ஆயிரக்